உ

சிவமயம்



# இணுவில் சிவகாமியம்மன் பேரில்

பாடிய

# இடர்களை பதிகமும்
# திரு வருக்கமாலையும்

★


ஆக்கம்:

இணுவிலாசிரியர், அளவைவாசர்

புலவர் வை. க. சிற்றம்பலம்



இணுவில்

1997

உ



இணுவில் சிவகாமியம்மன் பேரில்

பாடிய

# இடர்களை பதிகமும் திரு வருக்கமாலையும்

★

ஆக்கம்:

இணுவிலாசிரியர், அளவைவாசர்
புலவர் வை. க. சிற்றம்பலம்

உரிமை — ஆசிரியருக்கு

அச்சகம் — இணுவீல் சாயி

இணுவில்
1997

விலை — ரூபா: 20/-

# முகவுரை

இலங்கையின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடக்கே நான்கு கல் தொலைவிலுள்ள ஊர் இணுவில். இதன் வளப்பங்களைக் கண்டு ஆதியிற் குடியேறிய திருக்கோவலூர் வேளாண் பிரபு பேராயிரவன் அரச மாளிகைகளைக் கட்டி உயரப்புலம்வரை அரசாண்டான் என முத்துராசப் புலவர் தாமியற்றிய கைலாயமாலையில்

"................................................................ நல்விருந்தாய்
கோட்டுமே ழித்துவசன் கோவைப்பதி வாசன்
சூட்டு மலர்க்காவித் தொடைவாசன் — நாட்டமுறும்
ஆதிக்க வேளாளன் ஆயுங் கலையனைத்துஞ்
சாதிக்க வந்த சௌந்தரியன் — ஆதித்தன்
ஒரா யிரங்கதிரோ டொத்தவெளிற் பொற்பணிசேர்
பேரா யிரவனெனும் பேருடையான் — சீராருங்
கன்னல் செறிவாழை கமுகுபுடை சூழ்கழனி
துன்னு மிணுவில் துலங்கவைத்தான் —.............."

எனப் பாடியுள்ளார். இஃதன்றி ஈழமண்டல சதகம், யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச் சரித்திரம் என்பனவும் இவ்வுண்மையை வலியுறுத்தும் நூல்களாம். இப் பேராயிரவன் சந்ததியினரும் சின்னத்தம்பிப் புலவரும் தொன்றுதொட்டு இணுவிலில் சிதம்பரவளவு என்னுங் குறிச்சியில் சிவகாமியம்மைக்குத் கோயில் கட்டி வணங்கிவந்தனர் என்பது உலகமறிந்த உண்மை.

## இடர்களை பதிகம்

யாழ்ப்பாணம் ஆங்கிலேயராட்சியின் முன் ஒல்லாந்தரின் அரசாட்சியில் இருந்தது. அப்போது இணுவிலில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் அந்த ஒல்லாந்தரால் சிறையிலடைக்கப்பட்டார். இந்த இடுக்கண்ணின்போது வந்து விடுவிக்கவேண்டுமென்று தனது குலதெய்வமான இணுவில் சிவகாமியம்மையை வேண்டி மனமுருகி ஒரு திருப்பதிகம் சிறையிலிருந்தபடியே பாடினார். என்ன அற்புதம்! அன்னையின் திருவருளால் சிறைக்கதவு தானாகவே திறந்தது. புலவர் வெளிவந்து அன்னைமீது பிள்ளைத் தமிழ், தூது, திருப்பதிகம், திருஊஞ்சல் முதலிய பிரபந்தங்களைப் பாடிப் பரவினார்கள். அந்தப் பேராயிரவன் வழி மரபில் வந்த அடியேனும் இந்த இக்கட்டான நிலையில் அர்ச்சனையே பாட்டாகப் பரவிப் பாடினால் அன்னை அருள்செய்வாள்தானே என்ற நோக்கிலிருந்தபோது, இணுவிலைத் தாயகமாகக்கொண்ட கொழும்புத் தமிழ்ச் சங்கத்திருந்த அன்னையின் அன்பரான ஆசிரியர் திரு. க. இ. க. கந்தசாமியவர்களும் இதேநோக்கில் பாடும்படி அடியேனைத் தூண்டி எழுதினார்கள். அதனால் மேலுந் தூண்டப்பட்ட நான் மிகுபக்தியுடன் இந்த இடர்களை திருப்பதிகத்தை கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் பாடினேன். பாடல் அன்னையின் செவியிற் புகுந்தது. பேரிருளில் ஒரு வெளிச்சங் கண்டாற்போல எல்லோருக்கும் ஒரு பயன் கிடைத்தது. அன்பர்களே நீவிரும் இப் பதிகத்தைப் பாடி அன்னையின் திருவருளைப் பெறுவீர்களாக.

## திருவருக்கமாலை

இந்த நூலும் பிரபந்த வகைகளுலொன்று பன்னிரு பாட்டியலில்

"மொழிக்கு முதலாகிய எழுத்துக்கெல்லாம்
வருகக முரைப்பது வருக்க மாலை"

என்ற சூத்திர விதிக்கேற்ப பாடியுள்ளேன். இந்நூலில் அன்னையைப் பற்றியும், இணுவிலில் அவள் எழுந்தருளியமை பற்றியும், செய்த அற்புதங்கள் பற்றியும் இயன்றவரை—தெரிந்தவரை அவளருளால் பாடியுள்ளேன். இதனையும் அன்பர்கள் ஆதரித்து ஏற்றுக்கொள்வீர்களாக.

முன்னரே அடியேன் அன்னைமீது

(1) திருஇரட்டைமணிமாலை
(2) திருப்பள்ளிஎழுச்சி

ஆகிய பிரபந்தங்களையும் பாடியமை உங்கள் யாவருக்கும் தெரியுந்தானே.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையாருள்ளிட்ட இணுவிற் கோயில்களெல்லாம் வரலாற்றுச் சிறப்புடையன. ஆகவே நூல் வடிவில் இணுவில் வரலாறு வெளிவரவேண்டுமென இறைவியைப் பிரார்த்திக்கின்றேன்.

இணுவில்
1997 — ஆவணி

புலவர் வை. க. சிற்றம்பலம்

உ

இணுவில் அருள்மிகு சிவகாமியம்மை மீது பாடிய

# இடர்களைந்த திருப்பதிகம்

## காப்பு

(பதினான்கு சீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்)

கலைநிலவு மிணுவைதனில் குலவுகதிர்க் கைவீசும்
கவினிமிளிர் சோலை நாடி
கருமுகில்கள் வரக் கண்டு கானமயில் நடமாடிக்
களிக்குங்கோ புரக்கோ யில்வாய்

நிலவுமொரு விமானஞ்சேர் மூலத்தா னம்மேவி
நிற்குஞ்சிவ காமி மீது
நித்தமடி, யார்படுந் துயர்துன்பம் யாவையும்
நீக்கிட வேண்டு மென்று

தலைநின்ற வேட்கையுடன் தண்டமிழின் தொன்மை சேர்
தக்கயாப் பணிகள் சேர
தகவுடைய வாசிரிய விருத்தத்தாற் கவிபாடத்
தடையொன்றும் வாரா தென்முன்

மலையென்ன நின்றருளு மைங்கரக் கடவுளாம்
மதியணியு முக்கட் களிறென்
மகிழ்வுடைய இதயமலர் கருதியமர்ந் தினியநல்
மங்கலக் காப்புத் தருமே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 1

மணியோசை மறையோசை மாண்புமிகு பண்ணோசை
மங்கலநல் முழவினோசை
மாறாதெஞ் ஞான்றுமே பேராதொ லித்திடும்
மாபெருங் கோயில்கொண்டாய்

அணியார்க அருள்பொழியு மம்பிகைநின் னாடல்மகிழ்
அன்பரோ டுடனாடுவாய்
அனுதினமு மவ்வடியர் கொடுமைசெயும் பகைவரால்
ஆட்டிப் படைத்தல் நன்றோ



பணியாத திருமாலைப் பரமன்வரத் தாற்பெற்ற
பாலனுடன் சபித்தபாவாய்
பாடுவார்க் கிரங்கியே நாடியே காத்திடும்
பகவதீ சற்றிரங்காய்

துணிவாகச் செய்வதொன் றறியாமல் உன்னிடஞ்
செப்பினெம் துயர்துடைப்பாய்
தூயநல் லிணுவைதனில் மேவுமிருப் பைநீழல்
சுந்தரீ சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 2

காதற்ற ஊசியும் வாராதென் றடிகள்சொல்
கற்றிட்டோம் கல்லாமலே
காணியில் லிடம் விட்டு நாடுநக ரம்நீங்கி
கையிலே கிடைத்தகொண்டு

பேதுற்ற நிலையிலே பிரியாது குடும்பமுடன்
பெருமாட்டி யுனைநினைந்தே
பெருவீதி நெடுஞ்சாலை மழைபெய்ய நடந்தனம்
பெருந்துயர மிடைமிடையவே

ஏதற்ற நிலையிலெமை நீசற்று நோக்கினால்
என்னதான் கெட்டுவிடுமோ
எந்நாளு முன்னையெம தன்னையென் றேத்தினோம்
ஈதுநீ யறியாததோ

தாதுற்ற செங்கமல மலரென்ன முகச்செல்வி
சாம்பவியித் தருணங் காப்பாய்
தரணிபுக ழிணுவைதனில் பரவிவள ரிருப்பைநிழல்
தங்கியருள் சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 3

ஐந்துசீ லத்தினால் உன்சரணம் புனைந்துருகி
யருள்சின்னத் தம்பிப்புலவர்
அநியாய மாகவே சிறையிடைப் படுத்தலும்
அன்னைநின் னரியகோலம்

சிந்தனை திருத்தியே ஒரு பதிகம் பாடுதலும்
திடுதிடெனச் சிறையின்கதவு
திக்கெட்டும் கேட்டிட விட்டுப் பிளந்துடன்
திறந்திட அவரைமீட்டாய்

அந்தளவு அன்பெமது சிந்தைதனி லிலதெனினும்
அகதியெமை மீட்பதாரோ
ஆயிரமாயிரமான துன்பங்கள் பட்டுநாம்
அவனியில் திரிதல்நன்றோ

சந்ததமு முனதுசெய லெமதுசெய வல்லவோ
சங்கரீ வந்துகாப்பாய்
தகவுடைய யிணுவைதனில் குலவுமணிக் கோயிலுறை
சக்தியே சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 4

அம்மையே நீயன்றி அகிலத்தை யென்றுமே
ஆட்டிப்படைப் பார்களுண்டோ
அருட்சத்தி யுடையவுன் முழுச்சக்தி தரும்படி
அடைந்தனஞ் சரணமதிலே

இம்மையே யிலங்கையில் தமிழர்நாம் படும்பாட்டை
எடுத்துனக் குணர்த்தல்வேண்டாம்
இன்றெமது நிலைதனைச் சொல்லவோ எழுதவோ
எவராலுந் தான்முடியுமோ

மும்மைநெடு மன்னர்வழி மூப்புடன் வாழ்ந்தநாம்
முனைப்பிலே மாற்றநின்றோம்
மூச்சுப்பேச் சின்றியே வாய்த்தவுன் சத்தியால்
முன்வந்து மீட்டிடம்மா

செம்மையே யுன்றனைச் சேவிக்கு மிணுவையெனச்
சிந்தையி லிருக்கவைத்தோம்
திகழ்பட்டர் துயர்தீர்க்க உயர்திங்கள் காண்பித்த
செல்வியே சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 5

சிவனெங்கே நின்றனன் சிவையுநீ சேர்ந்தொன்றாய்
திருவிளை யாடல்செய்வாய்
சிவரை யென்றுமே யவர்வினைகட் கேற்பவே
சிவமய மாக்குஞ்செல்வி

பவமதை நீக்கியே யவ்வுயிர்ப் பசுக்களைப்
பாகஞ்செய் தருளுமன்னே
பாக்கிய மேயுன்றன் நோக்கினைப் பெற்றிடப்
பலபல தொண்டுபுரிவோம்



நவமென்ன வளருலகில் நம்மவரை நலிந்திடும்
நவைதனை எண்ணிடாதே
நாயகி நீசும்மா நணுகா திருந்திடலும்
நாஞ்செய்த பாவந்தானோ

அவமதை நீக்கியே தவமதைச் செய்திட
அருளுவாய் நீவந்திடில்
ஆருனைத் தடுப்பவர் அம்மையே யிணுவைவாழ்
அபிராமி சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 6

ஏவருந் துதிசெயுங் கைலாய நாதனெனு
மிளந்தாரி யன்பின்மூழ்கி
இருநிலமு மற்புதங் கொள்ளவே இதுவரை
எவருங்காட் டாதவழியில்

தேவருந் துதிசெய்ய யாவருந் தொழுதிட
திசையெங்கு மிசைபொங்கவே
திரமாக நின்றிடும் புளியேறி யின்றுவரை
திரும்பாது வானம்புகலும்

ஆவருவர் கைலாயர் வருவரென் றன்றன்பர்
ஆர்த்திடப் பாதஞ்சேர்த்தாய்
அதுபோல வின்றுநா மிடம்பெயர்ந் தல்லலுற
அன்னைநீ என்னசெய்தாய்

ஓவில்நங் குரல்கேட்டு ஒருதனியற் புதஞ்செய்து
ஓடியெமை மீட்கவாராய்
உலகுபுக ழிணுவைதனிற் குலவுகற் பகச்சோலை
உயர்கோயிற் சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 7

வாடுபயி ருக்கெலாம் தேடிவரு வான்மழையின்
வறியார்க்கீ வள்ளல்போல
வாழ்விலுந் தாழ்விலும் மறவாதுன் னடியர்தமை
வன்கணார் தாக்குமிந் நாள்

தேடிவந் தருளலே நினதுகட னாகவும்
தேவியே கடைக்கணோக்கி
தெறுவினை யடர்த்திட இவ்வரை விரைந்திடாய்
தேம்பினோம் பிடியொன்றிலேம்

காடுபடு மிடங்களில் வீடுகுடில் வைத்துனைக்
கருதிடும் வாழ்வுபெற்றோம்
காப்பாள ரின்றியே தாம்புகொடி போலவே
தள்ளாடு நிலையிலுள்ளோம்

பாடுபடு மிந்நேரம் வந்தெமைக் காத்திடாய்
படுந்துயர் போதும்போதும்
பத்தரும் வித்தரும் கூடிணுவைக் கோயிலுறை
பராசத்தி சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 8

கங்கைதங் கியசடையும் களிதருநல் மதிக்கீறும்
கதிரெறியு நுதல்விழியுஞ்சேர்
கருநீல கண்டனது இடமேவி விடையேறும்
கருணைமழை பொழியுமுமையே

எங்குநீ நின்றாலும் அங்குவந் துனதுபதம்
ஏத்தியே குடிவாழும்
இனியவடி யவரின்று இடம்பெயர்ந் திடர்ப்படும்
இன்னல்நீ யறியாததோ

பொங்குசெந் தமிழ்பேசும் புனிதரா ராமின்று
புகலின்றி நெடிதுவாடி
பொல்லாத வகையினால் இல்லாத துயர்கொண்டோம்
பூவையெமை வந்துகாப்பாய்

மங்குல்மதி தவழ்கின்ற மாடநெடு வீதிபல
மருவுகலை யிணுவையாடும்
மணமலர்கள் சங்காக வண்டூத மயிலாடும்
மாதேவி சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 9

அருளொழுகு முகமதியு மஞ்சனநல் லயில்விழியும்
அழகுதரு முல்லை நகையும்
அஞ்சுகமென் மொழிபேசு மணிபவள வாயுடன்
அரற்றுசிலம் பொலிக்கநின்றே

பொருவரிய தில்லையில் புனிதநட ராசனுடன்
பொருந்திவிளை யாடல்புரியும்
பொன்மணி பூரணி புராதனி யெமதிணுவை
புரந்திட சுண்டுவந்தாய்



தருமமெ ல் ன்றியே தீவினைகள் மேன்மேலுந்
தமியேமை வாட்டல்கண்டும்
தாயுமா நுடன்வந்து கைகொடுத் துதவாமல்
தனித்தெமை விடுத்தலழகோ

பெற்றமைந்த ஊர்விட்டு மனைமக்கள் பின்தொடர
பேணிமீ சாலைவந்தோம்
பிறந்த பொன் னாட்டையு மெம்மையுங் காத்தருளும்
பேறுதா சிவகாமியே.

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 10

மின்னுழுதவும் பொன்னுதவும் மேனிநல் லொளியுதவும்
மிகு கல்வி செல்வமுதவும்
மீகா மனில்லா திடருறுங் கப்பலிலும்
மேவியே துணைகொடுக்கும்

அம்பிகை யன்னைநீ யவலத்திற் கைகொடுத்
தருளியே காப்பையென்றே
அனுதினமு முனதுதுணை யடிமலரை நினைந்தனம்
அடிமையெனத் தாக்கல் நன்றோ

முன்னமரர்க் கிடர்செய்த மகிடனைவல் லரியேறி
முச்சூலத் தால்லடர்த்த
முறையினை மறந்திலோம் குறையிரந் திந்நேரம்
துதித்தனம் வாழ்வுபெறவே

அன்னமெனப் பிடியென்ன அழகுநடை யுடனுலவும்
ஆரணி அபயமருள்வாய்
ஆரும் வந்துபணி பேருரா மிணுவையுறை
அபிராமி சிவகாமியே.

பத்துச்சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் 11

உள்ளமுங் கலங்கவன்பு முருகிட மனந்தள்ளாட
ஊரெலாம் விட்டுச் சென்று உழலுநன் மக்களெல்லாம்
வெள்ளம்போற் கண்ணீர்வார மெய்சிலிர்த் துரைத்த வெல்லாம்
விரைத்தன்னை செவியிலேற விளங்கினாள்போல் நடித்து

தள்ளரும் வினைகள்யாவும் தளரவோங் காரஞ்செய்தே
தரித்திடா தவலம் மாறித்தளிர்த்திடச் சும்மா நின்றே
அள்ளலி லுற்றார் மீண்டு அகன்கரை யடைந்தா ரென்ன
அன்புடன் மீண்டார் அன்னை அடியிணை
மலர்பெய்தார்த்தே.

உ

இணுவை

அருள்மிகு சிவகாமியம்மை

# திருவருக்க மாலை

### உயிர் வருக்கம்

அழகிய மாங்கனி வடிவுடைத் தாகி 1
ஆர்கலி யுலகில் அமைந்ததிவ் விலங்கை
இனிததின் சென்னியா யிலங்கும் யாழ்ப்பாணம்
ஈடிணை யில்லாப் பேருடைத் ததனை
உளங்கொள யாழிசைத் துரிமையாய்ப் பெற்ற
ஊர்புக ழந்தகக் கவிவீர ராகவன்
எழில்தரு மதனில் குடிகளை யிருத்தி
ஏற்றஞ் செய்திடு நாட்டத் தினனாய்
ஐம்பெரும் பூதத் திருத்தல மமைந்த
ஒரு தமிழ்நாட்டின் உயர்வெள் ளாளரில்
ஓதரும் பன்னிரு பேரினை யழைத்து
ஔவிய மின்றி யாங்கிருத் தினனே.

### க, வருக்கம்

கரைவரைப் படுத்திய அரசினை யேற்று 13
காப்புட னவரும் வாய்ப்புட னாண்டார்
கிளையுட னிருந்து முறையுட னாண்ட
கீர்த்திசேர் கோவலூர்ப் பேரா யிரவன்
குதிரைமீ திவர்ந்து வடபுல நாப்பண்
கூடிய வளமுடை இணுவிலின் கண்ணே
கெழுமிய வரண்மனை விழுமிதா யமைத்து
கேடிலா வுயரப் புலம்வரை ஆண்டே
கைவரு மரச சின்னங்க ளோடுதன்
கொற்றந் தன்னை மக்கள்மேற் சுமத்தி
கோதிலா தன்னை பாதஞ்சேர்ந் தானே.



### ச, வருக்கம்

சக்கர நெறிமுறை மக்களு மரசை 24
சார்ந்துநன் முறையே சேர்ந்துநன் காண்டார்
சிற்சபை நடமிடும் பொற்கொடி தனக்கு
சீருட னிணுவைச் சிதம்பர வளவில்
சுருதியின் முறையே யொருதிருக் கோயில்
சூழ்ந்திட வமைத்து நேர்ந்ததி லிருத்தி
செப்பிடும் வகையில் திருமுழுக் காட்டி
சேர்கலை பொன்மணி மாலைகள் புனைந்து
சைவநன் னீறுங் குங்குமத் திலகமும்
சொன்முக வாசமு நன்முறை யணிந்து
சோபனம் பண்ணினார் போனகம் படைத்தே.

### த, வருக்கம்

தனிச்சுவை முக்கனி பலகாரத் துடன் 35
தாமரை முதன்மலர் நீருடன் சொரிந்து
திருந்திட அவியுண வருத்தியும் பாடியும்
தீயிடைத் தூபமுந் தீபமுங் காட்டி
துடியொடு பல்லியஞ் சங்குடன் முழங்க
தூயநற் கொடிகுடை தோரணம் விளங்க
தெரிமணிக் கடுநடை விடைமிசை யேற்றி
தேவியை யுலாவிட வீதிவா யெடுத்தார்
தையலார் கவரியை வீசிமுன் வந்தே
தொழுதிடு மரபினன் மலர்மிசை யெறிந்தே
தோத்திரஞ் செய்தனர் வாழ்த்தினர் பணிந்தே.

### ந, வருக்கம்

நன்முறைப் பூசையும் மும்முறை யேற்று 45
நாள்தொறு மம்மையு நல்வர மனிக்குநாள்
நினைவுறா தம்மையை யிறைஞ்சிளந் தாரி
நீள்துயிற் காட்சியி லம்மையைக் கண்டு
நெக்குநெக் குருகியோர் புளிமரத் தேறி
நேரிதாய் உடலுடன் வானிடஞ் சென்றார்
நையுமவ் வன்பரை நாடியுங் காணார்
நொய்தில ரன்னையி னற்புத மென்றனர்
நோற்றவ ரன்பினை யாரறி வாரே

ப, வருக்கம்

பத்தராம் இனுவைச் சின்னத் தம்பியை
பகைஞரென் றெண்ணியால் வாந்தர் சிறையிட
பித்தரா மன்பின் புலவர்நன் குருகி
பீடுற வந்தெனை யாளென வழுது
புத்தரும் பதிகம் பாடிட அன்னை
பூட்டிய கதவுடைத் தருளினைப் புரிய
பெட்புடன் பிள்ளைத் தமிழ் தூ தூசல்
பேறுறப் பாடினர் பார்சிறந் திடவே
பைந்தமிழ் பாடிய பாவலர் போல
பொன்மலர்த் தாண்மலர் புகுந்திட யானும்
போற்றிப் பாடினேன் பொற்கோயில் முன்னே.

ம, வருக்கம்

மன்னிய வந்நாள் உன்னை வந்தடைந்த 65
மாண்பினென் னன்னையுந் தந்தையுஞ் செய்த
மின்னிய புண்ணிய மேன்மையி னாலே
மீளா வடிமையா யான்வளர்ந் தேனே
முன்னிய நீதிநூல் மேற்சங்க நூல்கள்
மூதறி வாளர்பால் யான்கற்க வைத்தாய்
மெல்லிடை யினுவைச் சிவகாமி யம்மே
மேவிநல் வாசிரி யத்தொழில் பூண்டே
மைவிழி சிறப்புன் மலரடி விடாதே
மொழிதரும் புராணம் திருமுறை வழியில்
மோனமா யுணர்ந்துனை மேவினே னுரைத்தே.

வ, வருக்கம்

வந்தனை புரியும் வாழ்வத னாலே 76
வாய்மையுந் தூய்மையும் வளர்வத னாலே
விந்தைசே ரெண்பத்து மூன்றிலும் பாடினேன்
வீடுற நினைந்தேன் பீடுற வருள்வாய்
வெறிதிவ் வுடம்பு பழுதுறா வகையில்
வேண்டுவேன் நின்னடி யாண்டும் பாடுவேன்
வையம் பிறவா வாழ்வருள் அன்னே.

வருக்க மாலை முற்றிற்று.

## புலவர் வை. க. சிற்றம்பலம் அவர்கள் பாடிய

# பிரபந்தங்கள்

1. அளவை கும்பழாவளைப் பிள்ளையார் நான்மணிமாலை
2. இணுவில் மஞ்சத்தடி கப்பனைப் பிள்ளையார் திருவூஞ்சல்
3. அளவை வெள்ளியம்பதி மாகாளியம்மை திருவூஞ்சல்
4. இணுவில் சிவகாமியம்மை திருஇரட்டை மணிமாலை
5. ஷை திருப்பள்ளிஎழுச்சி
6. தெல்லியூர் துர்க்கையம்மன் மும்மணிமாலை
7. உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் திருஇரட்டை மணிமாலை
8. திரு வடிவேற்சுவாமிகள் ஒருபா ஒருபது
9. ஷை திருஇரட்டை மணிமாலை
10. நலலூர்க் கலமபகம
11. நலலூர் ஒருபா ஒருபது
12. ஷை இணை மணிமாலை
13. பெருவிளான் கதிரமலை கந்தசுவாமியார் திருஊஞ்சல்
14. இணுவில் ஆனந்தநடராசா திருஊஞ்சல
15. இலஙகைவளம
16. மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் நான்மணிமாலை
17. ஷை செந்தமிழ்மாலை
18. அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் போற்றிப்பத்து
19. சுவாமி விபுலானந்த அடிகளார் நான்மணிமாலை
20. சுழிபுரம பறாளாய் சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ்
21. இணுவில் சிவகாமியம்மை இடாகளை பதிகம்
22. ஷை வருக்கமாலை
23. நாவற்குழியூர் நடராசன் புகழ்மாலை
24. நல்லூர் ஆதீனம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அட்டமங்கலம்
25. பண்டிதமணி கலாநிதி கணபதிப்பிள்ளை இருபா இருபது.
26. இயற்கையிலிறைவன்.